வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: நாராயணசாமி

தேதி: 29.09.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

நாட்டின் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் ராணுவ தயார் நிலைக்கான அவசியம் குறித்து பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வலியுறுத்தி உள்ளார்.

தமிழகத்தின் கரூரில் கூட்ட நெரிசலால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் ஆகியோர் இன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

பிரதமரின் இ-ட்ரைவ் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் மின்சார வாகன சார்ஜிங் மையங்கள் அமைப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட காரைக்கால் மீனவர்களை விடுவிக்க விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு வெளியுறவுத் துறை அமைச்சருக்கு புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி கடிதம் எழுதியுள்ளார்.

*ராஜ்நாத் சிங் (11)*

நாட்டின் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் ராணுவ தயார் நிலைக்கான அவசியம் குறித்து பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வலியுறுத்தி உள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற இந்திய கடலோர காவல் படை தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அச்சுறுத்தலை எதிர் கொண்டு முறியடிக்கும் வகையில் பாதுகாப்பு படையினர் எப்பொழுதும் விழிப்புடன்

இருக்க வேண்டும் என அறிவுறுத்தினார். மாறிவரும் தற்போதைய சூழல்களுக்கு ஏற்ற வகையில் புதிய அச்சுறுத்தல்களும், புதிய சவால்களும் உருவெடுப்பதாக தெரிவித்த அவர், அவற்றை எதிர்கொண்டு முறியடிக்கும் வகையில் முப்படைகளின் தனித்துவமான போர் நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என கூறினார்.

*நிர்மலா* (12)

தமிழகத்தின் கரூரில் கூட்ட நெரிசல் துயர சம்பவம் நடந்த இடத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று காலை பார்வையிட்டார். அவருடன் மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகனும் பார்வையிட்டார். அதனை தொடர்ந்து கரூர் அரசு மருத்துவமனைக்கு சென்ற திருமதி நிர்மலா சீதாராமன் கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகளிடமும் இச்சம்பவம் குறித்து நிதியமைச்சர் கேட்டறிந்தார். இதற்கிடையே, கரூர் கூட்ட நெரிசல் சம்பவங்களுக்கு மாநில அரசால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையத்தின் தலைவர் திருமதி அருணா ஜெகதீசன் இன்று 2 ஆவது நாளாக பல்வேறு தரப்பினரிடமும் விசாரணை மேற்கொண்டார்.

*சேவா சப்தாஹ்-* 1 (7)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, **மக்கள் சேவை-நல்லாட்சி** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர, அயராது உழைத்து வருகிறது. அரசின் பல்வேறு முயற்சிகளால், ரயில்வே சீர்திருத்தங்கள் எவ்வாறு இந்தியாவின் உயிர் நாடியை நவீன மயமாக்குகின்றன என்பதையும், ஒவ்வொரு குடிமகனும் உலக தரம் வாய்ந்த பயணத்தை மேற்கொள்வது குறித்து, **சேவைத் திருவிழா** என்னும், இந்த சிறப்பு **தொடரில்** காண்போம். ..........

*சேவா சப்தாஹ்- 2 (11)*

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் ரயில்வே சீர்திருத்தங்களால் தண்டவாளங்களில் ஒரு புரட்சியை உருவாக்கி நாட்டின் உயிர் நாடியை முன்னேற்றத்தின் சக்தியாக அரசு மாற்றியுள்ளது. பிரதமர் திரு நரேந்திரமோடியின் தலைமையிலான அரசு ரயில்வே பயணிகள் அனைவருக்கும் மிகவும் வசதியான, பாதுகாப்பான மற்றும் உலக தரம் வாய்ந்த பயண அனுபவங்களை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இந்திய ரயில்வே தடையற்ற இணைப்பின் மூலம் துரிதமாக செயல்படுகிறது. அண்மையில் காஷ்மீர் பள்ளத்தாக்கில் உதம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா ரயில் பாதையை தொடக்கி வைத்து பிரதமர் திரு நரேந்திர மோடி கூறுகையில்......

**வாய்ஸ் -பிரதமர்**

*சேவா சப்தாஹ்- 3 (18)*

ரயில் பயணத்தை பாதுகாப்பாகவும், வசதியாகவும் மாற்றுவதற்காக மத்திய அரசானது அம்ரித் பாரத் ரயில்கள் மற்றும் நமோ பாரத் அதிவேக ரயில்களை அறிமுகப்படுத்தி உள்ளது. அடுத்த 2 முதல் 3 ஆண்டுகளுக்குள் 200 புதிய வந்தே பாரத் ரயில்கள், 100 அம்ரித் பாரத் ரயில்கள், 50 நமோ பாரத் அதிவேக ரயில்கள் மற்றும் 17 ஆயிரத்து 500 ஏசி அல்லாத பொது பெட்டிகள் ஆகியவற்றை கொண்டு வருவதன் மூலம் நாடு முழுவதும் மக்களின் பயண அனுபவத்தில் புரட்சியை ஏற்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது. அம்ரித் பாரத் நிலையத் திட்டத்தின் கீழ், ஆயிரத்து 300 க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள் மறு சீரமைக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் உலகத் தரம் வாய்ந்த வசதிகள் உறுதி செய்யப்படுகின்றன. ரயில் இயக்கத்தின் போது மிக உயர்ந்த பாதுகாப்பு தரத்தை உறுதி செய்யும் வகையில் அதி நவீன தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பான கவச் என்ற அமைப்பையும் இந்திய ரயில்வே அறிமுகப்படுத்தி உள்ளது. வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் எதிர்காலத்திற்கான தயார் நிலை என்ற ஒரு ரயில்வே அமைப்பை உருவாக்குவதற்கான தேசிய ரயில் திட்டமும் தயாரிக்கப் பட்டுள்ளது. இந்த அமைப்பானது சாதாரண மக்களுக்கும் மலிவான,

பாதுகாப்பான மற்றும் நம்பகமான ரயில் போக்குவரத்து முறையை வழங்குவதில் கவனம் செலுத்துகிறது.

*இ-ட்ரைவ் (15)*

பிரதமரின் இ-ட்ரைவ் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 72 ஆயிரத்து 300 மின்சார வாகன சார்ஜிங் மையங்கள் அமைப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய கனரக தொழில்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ளது. அதில், பொது இடங்களில் சார்ஜிங் செய்யும் மையங்களுக்கு மானியம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள், குடியிருப்புகள் போன்ற இடங்களில் அமைக்கப்படும் சார்ஜிங் மையங்களுக்கு 100 சதவிகித மானியம் வழங்கப்படும் என்றும், ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள், பேருந்து முனையங்கள் மற்றும் மெட்ரோ ரயில் நிலைங்கள், சுங்கச்சாவடிகள் உள்ளிட்ட இடங்களில் அமைக்கப்படும் சார்ஜிங் மையங்களுக்கு மானிய உதவி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. அரசு அலுவலகங்கள், நெடுஞ்சாலைகள், பொது போக்குவரத்து மையங்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட இடங்களில் அதிக அளவில் மின்சார வாகன சார்ஜிங் மையங்களை அமைப்பதை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த வழிகாட்டு நெறிமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

*ரங்கசாமி (7)*

கோடியக்கரை அருகே இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட காரைக்காலை சேர்ந்த 10 மீனவர்கள் மற்றும் தமிழகத்தை சேர்ந்த 2 மீனவர்களை விடுவிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஜெய்சங்கருக்கு புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி கடிதம் எழுதியுள்ளார். எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கடந்த 25 ஆம் தேதி 12 மீனவர்களை கைது செய்த இலங்கை கடற்படை அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது.

ஜிஎஸ்டி- சுகாதாரம் 1 (7)

நாட்டில் தற்போது அமலாகி வரும், அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், மறைமுக வரிக் கட்டமைப்பை எளிமைப் படுத்துவதில், முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளன. இதுவரை 4 அடுக்குகளாக இருந்த ஜிஎஸ்டி கட்டமைப்பு, 5 சதவிகிதம், 18 சதவிகிதம் என, 2 அடுக்குகளாக குறைக்கப் பட்டுள்ளது. சுகாதார துறையில் வரி விகித சீர்திருத்தத்தின் மூலம், குடிமக்களுக்கு கிடைக்கும் பயன்கள் ஏராளம். அது குறித்த ஒரு செய்தி தொகுப்பு....

ஜிஎஸ்டி- சுகாதாரம் 2 (16)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் இந்த மாதம் 22 ஆம் தேதி தொடங்கப்பட்ட பச்சத் உத்சவ் சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் கிடைப்பதை உறுதி செய்துள்ளது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் இந்தியாவில் மறைமுக வரிமுறையை எளிமைப் படுத்துவதற்கான ஒரு குறிப்பிடத் தக்க படியாகும். சாமானிய மக்களின் நிதித் சுமையை குறைக்கும் வகையில் சுகாதாரத் துறையில் குறிப்பிடத்தக்க வரிக் குறைப்பை மத்திய அரசு செய்துள்ளது.

ஜிஎஸ்டி 2.0 -வின் படி, புற்றுநோய் மற்றும் நாள்பட்ட கடுமையான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படும் 36 உயிர் காக்கும் மருந்துகளுக்கான வரிகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. மேலும், அத்தியாவசிய மருந்துகள் மற்றும் நோயறியும் கருவிகள், குளுக்கோ மீட்டர்கள், வெப்பமானிகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களுக்கான ஜிஎஸ்டி 12 சதவிகித த்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முன்னர் 18 சதவிகிதமாக இருந்த சுகாதாரம் மற்றும் ஆயுள் காப்பீட்டு பிரீமியங்களுக்கான ஜிடிஸ்டி விகிதங்கள் தற்போது முற்றிலும் நீக்கப்பட்டு, வரி இல்லாத தாக மாற்றப்பட்டுள்ளது.

*ஜிஎஸ்டி- சுகாதாரம் 3 (6)*

இதன் மூலம், பிரீமியத் தொகை குறிப்பிடத் தகுந்த அளவு குறைந்துள்ளதோடு, அதிகமான குடும்பங்கள் காப்பீடு வாங்கவும் ஊக்குவிப்பதாக அமையும். ஜிஎஸ்டி சீர்திருத்தம் நோயாளிகளுக்கான சிகிச்சை செலவுகளை குறைத்துள்ளதோடு, நடுத்தர வர்க்கப் பிரிவினருக்கும் பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளது. இதுகுறித்து புதுச்சேரியை சேர்ந்த காப்பீட்டு ஆலோசகர் திரு தனசேகரன் கூறுகையில்......

*விளையாட்டு பரிசளிப்பு (8)*

புதுச்சேரி அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நல இயக்ககம் சார்பில் கருவடிக்குப்பம் காமராஜர் மணிமண்டபத்தில் தேசிய விளையாட்டு நாள் மற்றும் கேலோ பரிசளிப்பு விழா இன்று நடைபெற்றது. இதில் முதலமைச்சர் திரு ரங்கசாமி கலந்து கொண்டு கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் ஆகியோரும் பங்கேற்றனர்.

*அஸ்வினி வைஷ்ணவ் (7)*

நாட்டின் மிகப் பெரிய வேலைவாய்ப்பு வழங்கும் துறையாக மின்னனு உற்பத்தி துறை உருவெடுக்கும் என்று மத்திய மின்னனு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டின் மின்னனு உற்பத்தி சூழல் வேகமாக வளர்ந்து வருவதாகவும், புதிய மின்னனு வடிவமைப்பு திறன்கள் மேம்பட்டு வருவதோடு, புதிய தயாரிப்பு நடைமுறைகளும் உருவாகி வருவதாக தெரிவித்துள்ளார்.

*ஜிப்மர் (7)*

பிரதமர் திரு நரேந்திர மோடியால் தொடக்கி வைக்கப்பட்ட ஆரோக்கியமான பெண்-வலிமையான குடும்பம் திட்டத்தின் ஒரு பகுதியாக ஜிப்மர் மருத்துவமனை சார்பில் இன்று உளுந்தூர்பேட்டையில் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. கிராமப்புற பெண்களின் உடல்நலத்தை மேம்படுத்துவதோடு நோய் தடுப்பு, மனநலம் மற்றும் ஊட்டச்சத்து சார்ந்த உளவியல் ஆலோசனைகளும் வழங்கும் வகையில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில், கிராமப்புற பெண்கள் அதிக அளவில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

*வானிலை (6)*

தென்னிந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக இன்றும், நாளையும் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் இன்று ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*கிரிக்கெட் (4)*

ஐசிசி உலகக் கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டி நாளை தொடங்குகிறது. அசாம் மாநிலம் கவுகாத்தியில் இதன் தொடக்க விழா நடைபெறுகிறது. அதனை தொடர்ந்து நடைபெறும் முதல் போட்டியில் இந்தியா – இலங்கை அணிகள் மோதுகின்றன.